



காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஒன்றியம், படப்பை அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் நடைபெற்ற ”நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட முகாமில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்துகொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். அருகில் மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன், குன்றத்தூர் ஒன்றியக்குழுத் தலைவர் சரஸ்வதி மனோகரன், குன்றத்தூர் மத்திய ஒன்றியச் செயலாளர் இ.மணி, ஊராட்சி மன்றத் தலைவர் கர்ணன், துணைத் தலைவர் வினோத், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.





முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு மயிலை மேற்கு பகுதி விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் பகுதி துணை அமைப்பாளர் எஸ்.வி.மணிகண்டன் ஏற்பாட்டில், மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. கலைஞர் திருவுருவப்படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தி மற்றும் ஏழை எளியோருக்கு உணவை வழங்கினார். இதில் மயிலை பகுதி செயலாளர்கள் நந்தனம் கி.மதி, எஸ்.முரளி, வட்ட செயலாளர் மூ.இராஜேந்திரன் அகல்யா விஸ்வநாதன், பகுதி துணை செயலாளர் மாவட்ட அமைப்பாளர் சிஜடி நகர் ஆர்.குமரன் மாவட்டத் துணை அமைப்பாளர் சிறைச்செல்வன், பகுதி அமைப்பாளர் சீ.வி. திவான்குமார் மற்றும் 123 அ வட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ரூ.115 கோடி மதிப்பீட்டில்

# செங்கல்பட்டு அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் “நலம் காக்கும் ஸ்டாலின்“ திட்டத்தினை ஆய்வு மேற்கொண்டு பேட்டி!

சென்னை, ஆக.10

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (09.08.2025) செங்கல்பட்டு மாவட்டம், கிளாம்பாக்கம் அரசு ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளியில், “நலம் காக்கும் ஸ்டாலின்“ திட்டம் முகாமினை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பிறகு அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

**“நலம் காக்கும் ஸ்டாலின்“ திட்டம் ஆய்வு!**

கடந்த 02.08.2025 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் “நலம் காக்கும் ஸ்டாலின்“ எனும் மகத்தான திட்டம் தொடங்கப்பட்டது. இந்த திட்டம் தமிழ்நாடு மக்களிடையே மிகப் பெரிய அளவிலான வரவேற்பு பெருகி வருகிறது. கடந்த வாரம் முதலமைச்சர் அவர்கள் சென்னை மைலாப்பூரில் இந்த திட்டத்தை தொடங்கி வைத்தார்கள். அன்று தொடங்கப்பட்ட ஒரே நாளில் 38



மாவட்டங்களில் 38 இடங்களில் முகாம் நடத்தப்பட்டது.

இன்றைக்கு 2வது சனிக்கிழமை என்கின்ற வகையில் 36 இடங்களில் முகாம் நடத்தப்பட்டு வருகிறது. சென்னை, ஊட்டி நீங்கலாக 36 மாவட்டங்களில் நலம் காக்கும் ஸ்டாலின் எனும் திட்டம் நடைபெற்று வருகிறது. ஒவ்வொருக்கும் முழு உடற் பரிசோதனைகள் என்கின்ற வகையில் அவரவர் இருக்கின்ற இடங்களுக்கே தேடிச் சென்று முழு உடற் பரிசோதனைகள் செய்யும் மகத்தான திட்டமாக இன்றைக்கு தொடங்கப்பட்டிருக்கிறது.

இந்த திட்டத்தைப் பொறுத்த வரை முதலமைச்சர் அவர்கள் ஆறு மாத காலத்திற்குள் தமிழ்நாடு முழுவதும் 1256 இடங்களில் நடத்தப்படும் என்று அறிவித்தார்கள். தமிழ்நாட்டில் உள்ள 388 வட்டாரங்களில் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் 3 என்கின்ற வகையிலும் பெருநகர சென்னை மாநகராட்சியில் 15 என்கின்ற வகையிலும் 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட 5 மாநகராட்சிகளில் தலா 4 என்கின்ற வகைகளிலும் 10 இலட்சத்திற்கும் குறைவான மக்கள் தொகை கொண்ட 19 மாநகராட்சிகளில் தலா 3 என்கின்ற வகையில் முகாம்கள் நடத்தப்படவிருக்கிறது.

முதலமைச்சர் அவர்கள் நோயாளர்களை மருத்துவ பயனாளிகள் என்று அழைக்கும்படி சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையில் கடந்த வாரம் 44,418 பேர் மருத்துவ பயன் பெற்றிருக்கிறார்கள். 2வது வாரமாக இன்று காலை 09 மணி தொடங்கி இந்த முகாம்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சற்று நேரத்திற்கு முன்னர் வரை நடைபெற்றுக் கொண்டிருக்கும் 36 முகாம்களில் பதிவு செய்து பயன்பெற்று வருபவர்களின் எண்ணிக்கை 35,576 பேர். இந்த முகாம் மாலை 04 மணி வரை நடைபெறவிருக்கிறது. இந்த முகாம் மிகப் பெரிய அளவில் வெற்றி பெற்றிருக்கிறது.

ஒவ்வொரு முகாமிலும் ஆயிரக்கணக்கானோர் முழு உடற் பரிசோதனை செய்துக் கொள்ளும் பட்சத்தில் அவர்களுக்கான மருத்துவ சேவைகள் உடனடியாக வழங்கப்பட்டு அவர்களது உடல் நலன் குறித்து மருத்துவ அறிக்கை கோப்புகளுடன் உடனே வழங்கப்பட்டு வருகிறது. அவர்களுக்கு எதிர்காலத்தில் ஏற்படும் நோய் பாதிப்புகளுக்கு இந்த மருத்துவ அறிக்கை பயன்பெறும்.

**செங்கல்பட்டு மாவட்ட தலைமை மருத்துவமனை திறப்பு!**

முதலமைச்சர் அவர்கள் இன்று ரூ.110 கோடி மதிப்பிலான செங்கல்பட்டு மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை கட்டிடம் மற்றும் ரூ.5 கோடி மதிப்பீட்டில் மருத்துவ உபகரணங்கள் ஆக மொத்தம் ரூ.115 கோடி மதிப்பீட்டில் மாவட்ட தலைமை மருத்துவமனை இன்று பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. பல்லாவரத்தில் இருந்த வட்டார அரசு மருத்துவமனையில் ரூ.7.75 கோடி மதிப்பீட்டில் பல் மருத்துவமனை திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

செங்கல்பட்டு மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் 3 இடங்களில் கட்டப்பட்டு இருக்கின்ற துணை சுகாதார நிலையங்களையும் முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்திருக்கிறார்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.செல்வம், சட்டமன்ற உறுப்பினர் திருமதி. வரலட்சுமி மதுசூதனன், தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு.அருண்தம்புராஜ், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு. சோமசுந்தரம், செங்கல்பட்டு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.ப்ரியா, இணை இயக்குநர் மரு.செந்தில்குமார், மாவட்ட சுகாதார அலுவலர் மரு.பானுமதி மற்றும் மருத்துவர்கள், அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

### டி.கே.வினோத் ஏற்பாட்டு! ஆர்.டி.மதன்குமார் முன்னிலை

# மாதவரம் தெற்கு பகுதி இளைஞரணி சார்பில் கலைஞர் நினைவு நாள்!

## சி.எஸ்.எஸ்.டி. சீனிவாசன் தலைமையில் மதிய உணவு வழங்கப்பட்டது!

சென்னை,ஆக.10-

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் தெற்கு பகுதி இளைஞரணி அமைப்பாளர் டி.கே. வினோத் ஏற்பாட்டில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 7வது நினைவு நாளை ஒட்டி அவருடைய திருவுருவ படத்திற்கு மலர் மாலை அணிவித்து ஏழை எளியவர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் மாவட்ட சிறுபான்மை நலப்பிரிவு துணை அமைப்பாளர் எச். ஜெகன், பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர்கள் சந்தோஷ், நா.ப.புகழரசு, தா.டோம்னிக், மணோஜ், தமிழ்மாறன்(எ) மனோஜ், ச.சதீஸ், டி. கே.சிவ சூரியா மற்றும் வட்ட கழக நிர்வாகிகள் ஆனந்தன், பிரபா, ஸ்ரீதர், சிவா, தண்டபாணி, கோபால், விஜயராகவன், விஷ்ணு, தன்ராஜ், வெங்கட் கழக இளைஞரணி தோழர்கள் ரூபன், தீபக், ராஜேஷ், சாலமோன், சுதாகர், வெங்கட் மற்றும் கழக மூத்த முன்னோடிகள் என இந்நிகழ்வில் பங்கேற்று சிறப்பித்தனர்.



சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் மத்திய பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் ர.லோகேஷ் பிரபு ஏற்பாட்டில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் ஏழாவது நினைவு நாளை ஒட்டி அவருடைய திருவுருவ படத்திற்கு மலர் மாலை அணிவித்து ஏழை எளியவர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் திருவெற்றியூர் மத்திய பகுதி செயலாளர் இரண்டாவது மண்டல குழு தலைவர் ஏ.வி.ஆறுமுகம் தலைமையில் சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர். டி.மதன்குமார் மற்றும் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கேபிள் த.வேல்.கணேசன், முன்னிலையில் நடைபெற்றது. இதில் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### திருவள்ளூர் மாவட்டம் பாடியநல்லூரில்

# “நலன் காக்கும் ஸ்டாலின்” சிறப்பு மருத்துவ முகாம்!

## அமைச்சர் ஆவடி சாமு.நாசர் துவக்கி வைத்து பார்வையிட்டார்!

திருவள்ளூர் ஆக 10;

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைகிணங்க, திருவள்ளூர் மாவட்டம் பாடியநல்லூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் மருத்துவம் (ம) மக்கள் நல்வாழ்வு துறை சார்பில் “நலன் காக்கும் ஸ்டாலின்” சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற்றது மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப் தலைமை வகித்தார் மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சுதர்சனம், இணை இயக்குநர் (தொற்றநோய்) கிருஷ்ணராஜ் இணை இயக்குனர் (மருத்துவம் மற்றும் ஊரக நல பணிகள்) அம்பிகா சண்முகம், ஆகியோர் முன்னிலை வகித்தார்

மாவட்ட சுகாதார அலுவலர்கள் பிரியா ராஜ் , பிரபாகரன் (பூவிருந்தவல்லி), உணவு பாதுகாப்பு துறை நியமன அலுவலர் கதிரவன் ஒன்றிய கழக செயலாளர் மீ.வே.கருணாகரன் வரவேற்புரையற்றினார்கள் இதில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர் கலந்து கொண்டு முகாமே துவக்கி வைத்து சிறப்புரையாற்றினர் அப்போது அமைச்சர் கூறியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்திரவின்படி, தமிழ்நாடு அரசின் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பாக மக்களைத்தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் நம்மை காப்போம் 48 போன்ற ஆகிய சிறப்பான திட்டங்களின் வரிசையில் நலம் காக்கும் ஸ்டாலின் என்னும் சிறப்பான திட்டத்தில் முழு உடல் பரிசோதனை திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. மாநிலம் முழுவதும் முதற்கட்டமாக 1256 முகாம்கள் பல்வேறு மாவட்டங்களில் நடைபெற்றது. இம்முகாம்களில் 200க்கும் மேற்பட்ட மருத்துவர்கள் மற்றும் பணியாளர்கள் பணிகளில் ஈடுபட்டனர். நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாமை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு முழுவதும் கடந்த 02.08.2025 அன்று சென்னை சாந்தோம் சென்ட் பீட்ஸ் மேல் நிலைப்பள்ளியில் தொடங்கி வைத்தார்கள். அதனை தொடர்ந்து திரு வள்ளூர் மாவட்டம் ஆவடி மாநகராட்சி, ஆவடி சோதனை சவாடி அருகில் உள்ள இம்மாகுலேட் இருதய மேரி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாம் துவக்கி வைக்கப்பட்டது. இதன்தொடர்ச்சியாக இன்று பாடியநல்லூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் இம்மருத்துவ முகாம் தொடங்கி நடைபெற்று வருகிறது. இம்முகாமில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் இரத்த பரிசோதனை, இ.சி.ஜி மற்றும் எக்ஸ்ரே உள்ளிட்ட பரிசோதனைகள் அனைத்தும் இலவசமாக செய்யப்படும். இம்மருத்துவ முகாமில் பொது மருத்துவம், இருதய மருத்துவம், எலும்பு மருத்துவம், நரம்பியல் மருத்துவம், தோல் மருத்துவம் மற்றும் மகப்பேரு மருத்துவம் உள்ளிட்ட 17 வகையான சிறப்பு மருத்துவ நிபுணர்கள் கலந்து கொண்டு மருத்துவ சேவைகள் வழங்கப்படும்.

மருத்துவர்களால் பரிந்துரைக்கப் படுபவர்களுக்கு அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன், எக்கோ, இ.சி.ஜி, எக்ஸ்ரே, கார்ட்டியோகிராம், பெண்களுக்கான கர்ப்பபைவாய் மற்றும் மார்பக புற்று நோய் பரிசோதனைகள், அந்த முகாமிலேயே மேற்கொள்ளப்படும். முதலமைச்சரின் மருத்துவ காப்பீட்டு அட்டை மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான அடையாள அட்டை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை சார்பாக அமைப்புச் சாரா தொழிலாளர்களுக்கு நல வாரிய அடையாள அட்டை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தனியார் துறையில், இப்பரிசோதனை மேற்கொள்ள ரூ15,000 வரை செலவாகும் ஆனால் மக்களின் நலன் கருதி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரசு சார்பில் இலவசமாக பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகிறது. எனவே இம்முகாமில் பொது மக்கள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு மருத்துவ சேவைகளை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.. மேலும் திருவள்ளூர் மாவட்டத்தில் வட்டாரத்திற்கு 3 முகாம்கள் வீதம் 14 ஊரக வட்டாரங்களிலும் 42 முகாம்கலும், ஆவடி மாநகராட்சியில் 3 முகாம்கள் என மொத்தம் 45 முகாம்கள் வாரந்தோறும் நடைபெறவுள்ளது என தெரிவித்தார் முன்னதாக மாற்றுத்திறனாளிகளுக்கான முகாமில் மாற்றுத்திறனுக்கான சதவிகித அடையாள அட்டைக்கான ஆணைகளை வழங்கினார். இதில் அரசு துறை அதிகாரிகள் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### ஆவின் நிறுவனத்திற்கு பால் வழங்கி வரும் – 3,80 லட்சம் பால் உற்பத்தியாளர்களுக்கு

# தமிழ்நாடு அரசின் ஊக்கத்தொகையாக - ரூ.128.43 கோடி நிதி விடுவிப்பு!

## முதல்வர் உத்தரவு! பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் தகவல்!

சென்னை, ஆக. 10 -

ஆவின் நிறுவனத்திற்கு பால் வழங்கி வரும் 3.80 லட்சம் பால் உற்பத்தியாளர்களுக்கு தமிழ்நாடு அரசின் ஊக்கத்தொகையாக ரூ.128.43 கோடி நிதி முதலமைச்சர் அவர்கள் உத்தரவின்படி விடுவிக்கப்பட் டுள்ளது. டிசம்பர் 2023 முதல் ரூ.536.09 கோடி ஊக்கத்தொகையாக பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என பால்வளத் துறை அமைச்சர் த. மனோ தங்கராஜ் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஆவின் நிறுவன த்திற்கு பால் வழங்கி வரும் 3.80 பால் உற்பத்தியாளர்களுக்கு ரூ.128.43 கோடி ஊக்கத் தொகை வழங்கி உத்தரவிட்டுள்ளார்கள். முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி கடந்த 05.11.2022 முதல் ஆவின் பால் கொள்முதல் விலை பசும்பால் லிட்டர் ஒன்றுக்கு ரூ.32/லிருந்து ரூ.35/ ஆகவும், எருமைப் பால் லிட்டர் ஒன்றுக்கு ரூ.41/லிருந்து ரூ.44/ ஆகவும் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

பால் உற்பத்தியாளர்களிடையே கறவை மாடு வளர்ப்பை ஊக்குவிக்கவும் பால் உற்பத்தியை பெருக்கும் நோக்கத்திலும், கடந்த 18.12.2023 முதல் சங்கங்களுக்கு பால் வழங்கும் அனைத்து உறுப்பினர்களுக்கும் ஒரு லிட்டர் பாலுக்கு ரூ.3/ வீதம் பால் கொள்முதல் ஊக்கத்தொகை வழங்க தமிழ்நாடு அரசால் அரசாணை வெளியிடப்பட்டது.

கடந்த டிசம்பர் 2023 முதல் மார்ச் 2025 வரை தமிழ்நாடு அரசிடமிருந்து ரூ.407.66 கோடி பால் கொள்முதல் ஊக்கத் தொகை பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதனால் சுமார் 3.80 இலட்சம் பால் உற்பத்தியாளர்



கள் பயனடைந்து தொடர்ந்து கூட்டுறவு சங்கங்களுக்கு அதிகளவில் பால் வழங்கி வருகின்றனர். மேலும் தற்போது ஏப்ரல் 2025 முதல் ஜூன் 2025 வரையிலான காலத்திற்கு பால் கொள்முதல் ஊக்கத்தொகையாக ரூ.128.43 கோடி நிதி விடுவிக்கப் பட்டுள்ளது.

முதலமைச்சர் அவர்கள் பால் உற்பத்தியாளர்களின் நலனைப் பாதுகாத்திட தேவையான அனைத்து உதவிகளையும் ஆவின் நிறுவனத்திற்கு தொடர்ந்து வழங்கி வருவதால், கிராமப்புற பால் உற்பத்தியாளர்கள் பால் உற்பத்தி தொழிலில் ஆர்வமுடன் ஈடுபட்டு, ஆவின் பால் கூட்டுறவு சங்கங்களுக்கு பால் வழங்கி மென்மேலும் பொருளாதார மேம்பாடு அடைந்திடவும், கிராமப் பொருளாதாரம் உயர்ந்திடவும் தேவையான அனைத்து ஒத்துழைப்பையும் வழங்கிட வேண்டும் என பால்வளத்துறை அமைச்சர் த.மனோதங்கராஜ் கேட்டுக்கொண்டுள்ளார்.





சென்னை மேற்கு மாவட்டம் ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி இளைஞரணி சார்பில் 112அ வட்டத்தில் தலைவர் – கலைஞர் அவர்களின் ஏழாவது நினைவு நாளை போற்றும் வகையில் பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் சீ. தனுஷ்கோடி ஆதித்தன் ஏற்பாட்டில் கோடம்பாக்கம் வெள்ளாளர் தெருவில் அறுசுவை உணவை பொதுமக்களுக்கு ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி செயலாளர் வினோத் வேலாயுதம், 112அ வட்டச் செயலாளர் மு.மோகன் ஆகியோர் வழங்கினர். உடன் ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி இளைஞரணி அமைப்பாளர் வழக்கறிஞர் வ.வேல்குமார், பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் காந்தி (எ)ரா.ராஜேஷ் 112அ வட்ட அமைப்பாளர் மு. ராகேஷ், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டனர்.